## சைவநெறி தரம் 09

| வாரம் | தரம் | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|---|---|
| 1. | 8 | 3.0 | 3.1 | 1. திருமுறைப்பாடல்கள் | • தேவாரங்களினதும் தோத்திரப் பாடல்களினதும் சிறப்பினை அறிவர்.<br>• தேவாரங்களையும் தோத்திரங்களையும் மனனம் செய்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.<br>• எழுத்துப் பிழையின்றி வரிக்கிரமமாக தேவாரத்தினையும் தோத்திரத்தினையும் எழுதுவர்.<br>• பஞ்சபுராணம் பாடும் போது ஆரம்பத்திலும் இறுதியிலும் திருச்சிற்றம்பலம் பாடும் பழக்கத்தைக் கடைப்பிடிப்பர்.<br>• பாடல்களை பண்ணோடு பாடுவர்<br>• வரிக்கிரமமாக, பிழைகளின்றி இறைசிந்தனையுடன் தோத்திரப்பாடல்களை பாடுவர்<br>• பஞ்ச புராணத்தில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா திருப்பல்லாண்டு பெரியபுராணம் என்பன அடங்கும் என்பதை அறிந்து கொள்வர்.<br>• முதல் ஏழு திருமுறைகளும் தேவாரங்களாகும் என்பதை விவரிப்பர். | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | • பஞ்ச புராணப் பாடல்களின் பொருள் விளக்கத்தையும் அவைகள் பாடப்பட்ட சந்தர்ப்பத்தையும் அறிந்து விபரிப்பர். | |
| *02* | | *1.0* | *1.5* | 2. விரதங்களும் பயன்களும் | • விரதங்களின் முக்கியத்துவத்தினை அறிந்து அவற்றினை அனுட்டிப்பார்.<br>• நாள் விரதங்களையும் மாத விரதங்களையும் அறிவார்.<br>• விரதங்களை அனுட்டிக்கும் போது விரத நியதிகளைக் கடைப்பிடிப்பார்.<br>• ஆன்மீக மேம்பாட்டிற்கு விரதம் உதவுகின்றது என்பதை உணர்வார். | *02* |
| *03* | | *1.0* | *1.5* | *3.* பண்டிகைகள் | • பண்டிகைகளின் முக்கியத்துவத்தினை அறிந்து கடைப்பிடிப்பார்.<br>• சித்திரை வருடப்பிறப்பு பற்றி அறிந்து அதனை கொண்டாடுவார்.கூட்டு மனப்பாங்குடன் செயற்படுவார். | *02* |
| *03* | | *2.0* | *2.1* | 4. திருமுறைகளில் புராண இதிகாச கருத்துக்கள் | • திருமுறை என்றால் என்ன என்பதை அறிவார்.<br>• திருமுறைகளின் வைப்பு முறையையும் அதன் ஆசிரியர்களையும் அறிந்து அதற்கு மதிப்பளிப்பார்.<br>• திருமுறைகளின் பொருள் மரபின் அறிமுகத்தினைப் பெறுவார்.<br>• திருமுறைகள் வெளிப்படுத்தும் புராண இதிகாசக் கதைகளை இனங்காண்பார்.<br>• திருமுறைகளின் சிறப்பு பற்றிய விடயங்களைத் தேடியறிவார்.<br>• பன்னிரு திருமுறைகளின் பக்தி வெளிப்பாடுகளை இனங்காண்பார் | *02* |
| | | | *2.2* | 5. கண்ணப்பநாயனார் | • கண்ணப்பநாயனாரின் வழிபாட்டு முறைகளை விளங்கிக் கொள்வார்<br>• கண்ணப்பநாயனாரின் நற்பண்புகளை எடுத்துரைப்பார்.<br>• கண்ணப்பநாயனாரின் வரலாற்றை விளங்கித் தம்மாலான பணிகளுடாக சைவசமயத்தை மேன்மையுறச் செய்யும் ஆற்றலை வளர்த்துக் கொள்வார்.<br>• கண்ணப்ப நாயனாரின் வழிபாடு பிற்கால கண் பற்றிய | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | சத்திர சிகிச்சைக்கு வித்திட்டது என்பதை விளங்கிக் கொள்வார்.<br>• இறைவனை வழிபடுவோருக்கு இறைவன் அருள்புரிவான் என்பதை எடுத்துக் கூறுவார். | |
| *04* | | 4.0 | 4.1 | 6. ஆலய வழிபாடும் அறிவியலும் | • ஆலயம் என்பதன் பொருளை விளக்குவார்.<br>• ஆலய வழிபாட்டின் அவசியம் பற்றி விபரிப்பார்.<br>• ஆலய வழிபாட்டின் முக்கியத்துவத்தினை அறிவார்.<br>• ஆலய வழிபாட்டில் காணப்படும் சமய, விஞ்ஞான ரீதியான கருத்துக்களைத் தேடிப் பெறுவார் அவற்றை மற்றவர்களுக்குத் தெரியப்படுத்துவார்.<br>• கட்டிட அமைப்புக்களின் தத்துவத்தை மற்றவர்களுக்கும் எடுத்துரைப்பார் நமஸ்காரங்கள்,நேர்த்திகள் என்பவற்றின் சமய விஞ்ஞான கருத்துக்களை மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துவார்<br>• ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பதற்கு ஏற்ப வழிபாடுகளில் ஈடுபடுவார். | *02* |
| *05* | | 5.0 | 5.1 | 7. சமயகுரவர்ரும் அற்புதங்களும் | • சமய குரவர்கள் நால்வரும் இறைவன் அருள் பெற்றவர்கள் என்பதை அறிந்து கொள்வார்.<br>• சமய குரவர்கள் நால்வரும் இறையருளுடன் அற்புதங்களைச் செய்து, மக்களின் துன்பத்தை நீக்கி இறைபக்தியை வளர்த்தனர் என்பதை கதைகளுடாக விவரிப்பார்.<br>• சமய குரவர்களின் குரு பூசைத்தினங்களைக் கொண்டாடி அவர்களின் பணிகளுக்குமதிப்பளிப்பார்.<br>• சமய குரவர்கள் பாடிய தேவாரப் பதிகங்களை மனனம் செய்து பாடுவார்.<br>• சமய குரவர்களின் பணிகளை தாம் வாழும் சூழலில் முன்னெடுத்துப் பணிகளில் ஈடுபடுவார். | *02* |
| *06* | | 7.0 | 7.1 | 8. நாட்டார் வழிபாடு | • ஆகமம் சாரா வழிபாட்டின் வரைவிலக் கணத்தைக் கூறுவார்<br>• ஆகமம் சாரா வழிபாட்டுக்குரிய தெய்வங்களைப் பட்டியற்படுத்திக் காட்டுவார்<br>• ஆகமம் சாரா வழிபாடு இன்று வரை நிலைத்து நிற்பதற்கான காரணத்தை ஏற்றுக் கொள்ளுவார். | *02* |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | • ஆகமம் சாரா வழிபாட்டினால் கிடைக்கும் பயன் களை விளக்குவார்.<br>• நாட்டார் வழிபாடு ஆகமம் சாரா முறையில் இடம்பெறும் என்பதை அறிவார்.<br>• குமாரத்தன் வழிபாடு இடம்பெறும் இடங்களைக் குறிப்பிடுவார்.<br>• மதுரைவீரன் வழிபாட்டு முறைகளை அறிந்து போற்றுவார்.<br>• தாமும் அவ்வழிபாடுகளில் ஈடுபடுவர்.கூட்டு மனப்பாங்குடன் செயற்படுவார். | |
| *07* | | *8.0* | *8.1* | *உபநிடத சிந்தனைகள்* | | *02* |
| *08* | | *9.0* | *9.1* | **ஈழத்து சைவ ஆலயங்கள்** | • உகந்தை முருகன் ஆலயத்தின் சிறப்புக்களை அறிந்து போற்றுவார்.<br>• கதிர்காம முருகன் ஆலயத்தின் சிறப்புக்களை அறிந்து போற்றுவார்.<br>• வல்லிபுர ஆழ்வார் ஆலய வரலாற்றுச் சிறப்புக்களை போற்றுவார்<br>• தம் வாழ்க்கையில் இவ்வாலயங்களுக்கு தலயாத்திரை செல்ல வேண்டும் என்ற உணர்வினைப் பெறுவார். | *02* |
| *09* | *09* | | *1.2* | பஞ்சாங்கம் | • பஞ்சாங்கத்தின் அவசியத்தை எடுத்துரைப்பார்<br>• பஞ்சாங்கங்கள் குறிப்பிடும் நாளாந்த செயற்பாடுகளைப் பட்டியற்படுத்துவார்.<br>• இறைசிந்தனைக்கும் பஞ்சாங்கம் பார்த்தலுக்குமான தொடர்புகளை முன்வைப்பார்<br>• பஞ்சாங்கத்தின் முக்கிய விடயங்களை மற்றவர்களுக்கும் எடுத்துரைப்பார்<br>• வாழ்வியலுக்கும் பங்சாங்கத்துக்குமான தொடர்புகளை எடுத்துரைப்பார். | *02* |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | • பஞ்சாங்கமும் விஞ்ஞானமும் பற்றி அறிந்து கூறுவார்<br>• பஞ்சாங்க கருத்துக்களை சமூகத்திற்குக் கொண்டு செல்வார் | |
| *10* | | | *1.3* | நித்திய கருமம் | • நித்திய கருமங்களில் செய்யவேண்டிய அறச் செயல்கள் பற்றிக் கூறுவார்.<br>• சமூக நலன் கருதிய செயற்பாடுகளின் பயன்கள் பற்றி விளக்குவார்<br>• சைவசமயத்தில் சமூக நலன் கருதி பெரியார்கள் மேற்கொண்ட அறச் செயல்களைத் தொகுப்பார்<br>• அறச் செயல்கள் இம்மையில் இன்பத்தையும் மறுமையில் புண்ணியத்தையும் சேர்க்கும் என்பதை ஏனையோருக்கு எடுத்துரைப்பார். | *02* |
| *11* | | | *1.3* | விழுமியப்பண்பு | • சமூக விழுமியப் பண்புகளை வரையறுப்பார்<br>• விழுமியப்பண்புகளைக் கடைப்பிடிப்பதன் நன்மைகளைத் தொகுப்பார்.<br>• சமூகத்திற்கும் தமக்கும் எத்தகைய உயர்வைத் தரும் என்பதை மதிப்பிடுவார்<br>• சைவசமயப் பெரியார்கள் கடைப்பிடித்த விழுமியப்பண்புகளையும் அதனால் அவர்கள் பெற்ற நன்மைகளயும் விரித்துரைப்பார். | *02* |
| *12* | | *1.0* | *1.5* | விரதங்கள் | • நாள் விரதங்களையும் மாத விரதங்களையும் அறிவார்.<br>• விரதங்களை அனுட்டிக்கும் போது விரத நியதிகளைக் கடைப்பிடிப்பார்.<br>• ஆன்மீக மேம்பாட்டிற்கு விரதம் உதவுகின்றது என்பதை உணர்வார். | *02* |
| *13* | | | *1.5* | பண்டிகைகள் | • பண்டிகைகளின் முக்கியத்துவத்தினை அறிந்து கடைப்பிடிப்பார்.<br>• ஆடிப்பிறப்புப் பற்றி அறிந்து அதனைக் கொண்டாடுவார்.<br>• கூட்டு மனப்பாங்குடன் செயற்படுவார். | *02* |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| *14* | | *2.0* | *2.1* | நாலாயிரம் திவ்விய பிரபந்தம் | • நாலாயிரத் திவ்விய பிரபந்தங்கள் என்றால் என்ன என்பதை அறிவார்.<br>• நாலாயிரத் திவ்விய பிரபந்தங்களின் வைப்பு முறையையும் அதன் ஆசிரியர்களையும் அறிந்து அதற்கு மதிப்பளிப்பார்.<br>• நாலாயிரத் திவ்விய பிரபந்தங்களின் பொருள் மரபின் அறிமுகத்தினைப் பெறுவார்.<br>• நாலாயிரத் திவ்விய பிரபந்தங்களின் வெளிப்படுத்தும் புராண இதிகாச கதைகளை இனங்காண்பார்.<br>• நாலாயிரத் திவ்விய பிரபந்தங்களின் சிறப்பு பற்றிய விடயங்களைத் தேடியறிவார்.<br>• நாலாயிரத் திவ்விய பிரபந்தங்களின் பக்தி வெளிப்பாடுகளை இனங்காண்பார் | *02* |
| *15* | | *3.0* | *3.1* | திருமுறைப்பாடல்கள் | • தேவாரங்களினதும் தோத்திரப் பாடல்களினதும் சிறப்பினை அறிவார்.<br>• தேவாரங்களையும் தோத்திரங்களையும் மனனம் செய்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.<br>• எழுத்துப் பிழையின்றி வரிக்கிரமமாகத் தேவாரத்தினையும் தோத்திரத்தினையும் எழுதுவார்.<br>• பஞ்சபுராணம் பாடும் போது ஆரம்பத்திலும் இறுதியிலும் திருச்சிற்றம்பலம் பாடும் பழக்கத்தைக் கடைப்பிடிப்பார்.<br>• பாடல்களைப் பண்ணோடு பாடுவார்<br>• வரிக்கிரமமாக, பிழைகளின்றி இறைசிந்தனையுடன் தோத்திரப்பாடல்களைப் பாடுவார்<br>• பஞ்ச புராணத்தில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா திருப்பல்லாண்டு பெரியபுராணம் என்பன அடங்கும் என்பதை அறிந்து கொள்வார்.<br>• முதல் ஏழு திருமுறைகளும் தேவாரங்களாகும் என்பதை விவரிப்பார்.<br>• பஞ்ச புராணப் பாடல்களின் பொருள் விளக்கத்தையும் அவைகள் பாடப்பட்ட சந்தர்ப்பத்தையும் அறிந்து விபரிப்பார். | *02* |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 16 | | 4.0 | 4.1 | தலயாத்திரையும் ஆன்மீகமும் | • தலயாத்திரை சைவமக்கள் வாழ்வில் பெறும் இடத்தை அறிந்து கொள்ள விரும்புவர்களுக்கு விளக்கிக் கூறுவார்<br>• தலயாத்திரையின் ஆன்மீக முக்கியத்துவத்தை விளங்கிக் கூறுவார்<br>• தலயாத்திரை மூலம் இறைபக்தியும் ஆன்மீக விருத்தியும் ஏற்படும் என்பதை விபரிப்பார்<br>• தலயாத்திரை மூலம் வளர்க்கப்படும் விழுமியங்களை தனி வாழ்விலும் சமூக வாழ்விலும் கடைப்பிடித்து நடப்பார் | 02 |
| 17 | | 5.0 | 5.2 | அருணாசல தேசிகர் | • ஈழத்தின் சைவப் பெரியார்களை அறிவார்<br>• ஈழத்தின் சைவப் பெரியார்கள் சைவசமய வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளைத் தொகுப்பார்<br>• ஈழத்தின் சைவப் பெரியார்களின் பணிகளை அறிந்து தாமும் சமயத்திற்கு ஆற்றவேண்டிய பணிகளை அறிந்து செயற்படுவார்<br>• சைவசமயத்தின் வளர்ச்சிக்கு சைவர்கள் ஆகிய நாம் செய்யவேண்டிய பணிகளை அருணாசல தேசிகரின் வாழ்க்கை வரலாறு மூலம் அறிந்து எடுத்துரைப்பார் | 02 |
| 18 | | 7.0 | 7.1 | நாட்டார் வழிபாடு | • நாட்டார் வழிபாட்டின் வரைவிலக்கணத்தைக் கூறுவார்<br>• நாட்டார் வழிபாடு இன்று வரை நிலைத்து நிற்பதற்கான காரணத்தை ஏற்றுக் கொள்ளுவார்.<br>• பெரிய தம்பிரான், காத்தவராயன், ஐயனார் வழிபாடு நடைபெறும் இடங்களை அடையாளப்படுத்துவார்.<br>• பெரிய தம்பிரான், காத்தவராயன், ஐயனார் சடங்கின் போது நிகழ்த்தப்படும் கதைகள் எவையெனக் குறிப்பிடுவார்.<br>• சடங்கு முறைகளினூடாக கிராமிய நம்பிக்கை, | 02 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பண்பாடுகளைப் பேணிக்காக்க முன்வருவார். | |
| 19 | | 8.0 | 8.1 | ஈழத்து சைவசமய வளர்ச்சி | • ஈழத்தின் வரலாற்றுத் தொன்மையை அறிய உதவும் ஆதாரங்களைப் பட்டியற்படுத்துவார்.<br>• ஈழத்துச் சைவ மரபின் தொன்மை,வரலாற்றை அதனைப் போற்றும் மனப்பாங்கினைப் பெறுவார்.<br>• ஈழத்தின் சைவசமய வளர்ச்சி அனுராதபுர, பொலநறுவைக் காலங்களில் காணப்பட்டவாற்றை எடுத்துரைப்பார்.<br>• ஈழத்தின் தொன்மை வரலாற்யையும் தொன்மையையும் தேடி அறிந்து பாதுகாக்க முன்வருவார். | 02 |
| 20 | | 9.0 | 9.1 | **ஈழத்து சைவ ஆலயங்கள்** | • கண்டி கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலயம் பற்றி அறிந்து தலயாத்திரை மேற்கொள்வார்<br>• பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம் பற்றி அறிந்து அதன் சிறப்புக்களைப் போற்றுவார்<br>• மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம் பற்றிய வரலாற்றுக கதைகளைத் தேடிப் பெறுவார்<br>• போரைதீவு காளியம்மன் ஆலய சிறப்புக்களை அறிந்து அதனைப் போற்றுவார்<br>• தாந்தாமலை முருகன் ஆலயம் மற்றும் தொண்டமானாறு சந்நதி முருகன் ஆலயம் பற்றிய செய்திகளையும் சிறப்புக்களையும் போற்றுவார்<br>• மட்டக்களப்பு திமிலைதீவு மகாவிஷ்ணு ஆலயம் பற்றிய செய்திகளையும் சிறப்புக்களையும் போற்றுவார்<br>• யாழ்ப்பாணம் பெருமாள் ஆலய சிறப்புக்களை அறிந்து அதனைப் போற்றுவார் | 02 |